பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 புரட்டாசி 1ம் ஷவ்வால் 15 இதழ் 229

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 29-9-77

## விசாரணைக்கமிஷனுக்கு சாட்சியமளிக்க வசதி

யாழ்ப்பாணம், வியா. நாட்டில் ஏற்பட்ட வன்முறைச்சம்பவங்களை விசாரணை செய்யும் பொருட்டுத் தனிநபர் விசாரணைக்குழு ஒன்றை அரசாங்கம் விரைவில் நியமிக்கவிருக்கின்றது.

வன்முறைச் செயல்களால் உயிரிழந்தவர்கள் உடல் ஊறு ஏற்பட்டவர்கள் பொருட்களையும் உடமைகளையும் இழந்து அகதிகளாக இடம் பெயர்ந்தோர் ஆகியோர் பற்றிய தகவல்களை இவ்விசாரணைக்குழு ஆராயவுள்ளது.

இவ்வாலோசனைக் குழுவிற்கு சாட்சியங்களைச் சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் இச்சாட்சியங்களை முறைப்படுத்தி ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்க ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஆகவே வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் வன்செயல்களைநேரில்கண்டவர்கள் உடனடியாக கீழ்க்காணும் முகவரியுடன் நேர்முகமாகத் தொடர்பு கொள்ளுமாறு முன்னாள் செனட்டரும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகருமான சட்டத்தரணி எஸ். நடராசா தெரிவிக்கிறார். பாதிக்கப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 148-ம் இலக்க இல்லத்தில் சந்திக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

## பீலிக்ஸ் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, புதன். திரு. ஜே ஆர் ஜெயவர்தன மீது திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தொடர்ந்துள்ள வழக்கு விசாரணை அடுத்த மாதம் 6-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது 'ஜேர்னல்' எனும் ஆங்கில ஏட்டில் தம்மைப்பற்றி அவதூறாக கட்டுரை எழுதியிருந்ததாக திரு. பீலிக்ஸ் இந்த மான நஷ்ட வழக்கைத் தொடர்ந்துள்ளார்.

# மாவட்ட அமைச்சர்பதவி ஏற்பதா? இல்லையா?

## 'அதன் அதிகாரம் தெரியாமல் எப்படி முடிவுசெய்வது'

### திரு. அமிர்தலிங்கம் கூறுகிறார்

யாழ்ப்பாணம், வியா. திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைப் பிரதமராகக் கொண்ட புதிய ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் உத்தேசித்துள்ள மாவட்ட அமைச்சர் பதவியைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்கவேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றுவரும் அதேசமயம் இப்பதவியை ஏற்கக்கூடாதென்ற கருத்தும் நிலவுகிறது.

இதுபற்றி எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர்களில் ஒருவருமான திரு அமிர்தலிங்கத்திடம் நேற்று நமது பிரதிநிதி கேட்டபோது, "மாவட்ட அமைச்சர்கள் பற்றி அரசியல் அமைப்புக்குக் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தத்தில் எதுவுமில்லை. இந்த அமைச்சர்களின் அதிகாரம் என்னவென்பது பற்றிய [illegible] வும் இல்லை. எனவே இதுபற்றி இப்போது மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்பதா இல்லையா என்பது பற்றித் தமிழர் விடுதலைக் கூட்டணி எந்த முடிவுக்கும் வரமுடியாதிருக்கிறது" என்று சொன்னார்.

பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுடன் சமீபத்தில் [illegible] இந்த மாவட்ட அமைச்சர்கள் பற்றிப் [illegible] வில்லையா எனக் கேட்டபோது இந்தப் பிரச்னை பற்றிப் பேசவில்லையென்றும், அகதிகள் பிரச்னை, அரசாங்க ஊழியர் பிரச்னை பற்றியே பேசியதாகவும் திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

## கடலில் வீசப்படவிருக்கும் 1,300 ருத்தல் பாண்!

கொழும்பு, புதன். மனிதபாவனைக்கு உதவாத 1,300 ருத்தல் பாணையும் கடலில் வீசிவிடுமாறு கொழும்பு மாநகரசபை நீதவான் திரு. பி. சுந்தரலிங்கம் இன்று உத்தரவிட்டார்.

மனித பாவனைக்கு லாயக்கற்ற உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதையும் அவற்றை விற்பனை செய்வதையும் கொழும்பு மாநகரசபையின் பொது சுகாதரப் பிரிவு அதிகாரிகள் இப்பொழுது தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர். இவர்கள் இன்று வீசிய 'வலையில்' சிலர் அகப்பட்டுக் கொண்டனர். இவர்கள், பாவனைக்கு உதவாத பாணை விற்பனை செய்ய முயன்றதாகவும் தவறான முறைகளில் எடுத்துச் சென்றதாகவும் குற்றம் சாட்டப்பட்டு மாநகரசபை நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

ஒவ்வொருவருக்கும் தலா 100 ரூபாய் வீதம் அபராதம் விதித்த நீதவான், பிரயாணிகள் 'வான்' களில் கொண்டு செல்லப்பட்ட 1,300 ருத்தல் பாணையும் கடலில் உடன்வீசிவிடுமாறு உத்தரவிட்டார்.

## 160 பேருடன் விமானத்தைவெடிவைத்து தகர்க்கப் போகிறார்களாம்!

டாக்கா, செப். 28 ஜப்பானிய செஞ்சேனையைச் சேர்ந்த இருவரினால் பம்பாயில் வைத்து இன்று கடத்தப்பட்ட ஜப்பானுக்குச் சொந்தமான விமானத்தை வெடி வைத்துத் தகர்த்து அதிலுள்ள 160 பேரையும் கொலை செய்யப்போவதாக கடத்தல் காரர்கள் பயமுறுத்தியுள்ளனர்!

142 பிரயாணிகளையும் 18 விமானச் சிப்பந்திகளையும் சுமந்து கொண்டு பம்பாயிலிருந்து பாங்கொக் நோக்கிப்புறப்பட்ட இந்த விமானத்தை புறப்பட்ட சில நிமிடங்களிலேயே கடத்தல் காரர்கள் இருவரும் திசை திருப்பி [illegible] தலைநகரமான டாக்காவில் இறக்கினர்.

கடந்த பத்து மணி நேரமாக இந்தவிமானம் டாக்கா விமான நிலையத்தில் பிரயாணிகளுடனும் விமானச் சிப்பந்திகளுடனும் நிற்கிறது.

கடத்தல் காரர்களான "செஞ்சேனை துப்பாக்கிக் காரர்கள்" இருவரும் ஜப்பானிய அரசுக்கு விடுத்துள்ள கோரிக்கையில், ஜப்பானில் சிறைவைக்கப்பட்ட ஒன்பது செஞ்சேனை வீரர்களையும் உடனடியாக விடுதலை செய்யாவிட்டால் பிரயாணிகளுடன் விமானம் குண்டு

(5ம் பக்கம் பார்க்க)

## மணலி காலமானார்

சென்னை, செப். 28 திரு. மணலி கந்தசாமி (69 வயது) இன்று தாஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருத்துறைப் பூண்டியில் காலமானார்.

கம்யூனிஸ்ட் பிரமுகரான இவர், தமிழ்நாடு சட்டசபையின் உறுப்பினராகவும் இருந்தவர்.

## இறைவரித் திணைக்கள

## தூதுகோஷ்டி இன்று யாழ். வருகிறது

யாழ்ப்பாணம், வியா. பாதிக்கப்பட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தைச் சேர்ந்த தமிழ் ஊழியர்கள் சங்கத்தினர் கொழும்பிலிருந்து இன்று யாழ்ப்பாணம் வரவுள்ள திணைக்களத் தொழிற் சங்கத் தூதுக்குழுவில் தாங்கள் வேலைக்குத் திரும்பிப்போக முடியாத காரணங்களை விளக்கிக் கூறுவதென்று முடிவு செய்துள்ளனர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள இறைவரி சேவைச் சங்கம் பாதிக்கப்பட்டவர்கள் விடயமாக பொது நிர்வாக அமைச்சுக்கும், ஆணையாளர் நாயகத்திற்கும் [illegible] கைகளை விடுத்துள்ளதுடன் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து அவர்கள் கஷ்டங்களை அறிவதற்கு யாழ்ப்பாணத்திற்கு இன்று வரவிருக்கின்றனர்.

இவர்கள் கலந்துகொள்ளும்

(6ம் பக்கம் பார்க்க)

## 8-ம் திகதி கூடுவர்

யாழ்ப்பாணம், வியா. கலவரங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் அரசாங்க ஊழியர்கள் மீண்டும் அடுத்தமாதம் 8-ந் திகதி யாழ். றிமர் மண்டபத்தில் கூடவிருக்கின்றனர். (செ)

## உப்பளத்தில் உடன் வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், வியாழன். குறிஞ்சாத்தீவு உப்பளத்தில் வேலை செய்வதற்குத் தொழிலாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தனித்தனிக் குழுக்களாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுவதற்குத் தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர் என்றும் இவர்களுக்கு இலவசமான இருப்பிட வசதிகள் வழங்கப்படுமென்றும் ஆனையிறவு உப்பளத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளங்களிலிருந்து அடுத்த முதல் வாரத்தில் 10,000 தொன் உப்பு பங்களாதேஷுக்கு ஏற்றுமதி செய்யவிருப்பதைத் தொடர்ந்து இரண்டு உப்பளங்களிலும் இப்பொழுது இரவு பகலாக வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஆனாலும், தொழிலாளர்கள் பற்றாக்குறை நிலவுவதால் வேலையைத் துரிதப்படுத்தமுடியாதிருக்கிறதெனத் தெரியவருகிறது.

ஆனையிறவு உப்பளத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இதுபற்றித் தெரிவிக்கையில் குறிஞ்சாத்தீவு உப்பளத்திலிருந்து ஒரு லட்சம் பைகளில் உப்பு நிரப்பிக் கட்டுவதற்கு இதர தொழிலாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர் என்றும், பதினைந்து அல்லது இரு

(6-ம் பக்கம் பார்க்க)

## நூதனசாலை அமைக்க மாணவர்கள் முயற்சி

அரியாலை, புதன். யாழ். பரியோவான் கல்லூரி தேசிய உயர் தொல் பொருள் ஆய்வுக்குழு மாணவர்கள், நல்லூரின் பண்டைய கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கல்லூரியில் நூதனசாலை யொன்றை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நூதனசாலையில் வைத்துப் பேணிப்பாதுகாக்க நாணயங்கள் ஏடுகள், பழமை மிக்க வீட்டுத்தளபாடங்கள், உபகரணங்கள், மரவேலைப்பாடுகள் ஆபரணங்கள் நல்லூரில் பெரியார்கள் புலவர்கள் சம்பந்தமான தகவல்கள் நூல்கள் ஆகியவற்றைத் தந்துதவும்படி கோரிக்கை யொன்றை விடுத்துள்ளனர்.

# வங்கி ஊழியர்களுக்கு நீதிமன்றம் தடைஉத்தரவு

## வெளிநடப்பு கைவிடப்பட்டது

கொழும்பு, வியா.

வெளிநடப்பு நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த இலங்கை வங்கிஊழியர்சங்கம்கொழும்பு மாவட்ட நீதிமன்ற இடைக் காலத் தடையுத்தரவு ஒன்றைத் தொடர்ந்து வெளிநடப்பைக் கைவிட்டன.

நேற்றுமாலை மூன்றுமணிக்கு இந்த வெளிநடப்பு நடைபெற விருந்தது. மேற்படி சங்கத்தைச்சேர்ந்த இரு ஊழியர்கள் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவொன்றின்மீதே மாவட்ட நீதவான் திரு. கே. விக்னராஜா மேற்குறித்த இடைக்கால உத்தரவை விடுத்தார்.

தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்டதின் பின்னர் நியமனம்பெற்ற 947 வங்கி ஊழியர்கள் தொடர்பாக இலங்கைவங்கி ஊழியர் சங்கம் எடுக்கத் தீர்மானித்திருந்த நடவடிக்கைகள் அனைத்துமே கைவிடப்பட்டுள்ளது.

இந்த ஊழியர்களின் சார்பில் நேற்று பி.ப.3 மணிக்கு வெளிநடப்பு செய்வதற்கு சங்கம் தீர்மானித்திருந்தது. ஆனல் இந்த வெளிநடப்பை நீதிமன்றத்தீர்ப்பு தடைசெய்துள்ளது.

# அமைச்சர் நாளை

## டாக்டர்களைச் சந்திப்பார்

(கொழும்பு)

இனக் கலவரங்களை அடுத்து இதுவரை வேலைக்குத் திரும்பாத டாக்டர்களின் விவகாரம் குறித்து அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கப் பிரதிநிதிகளை சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா நாளை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

இதே வேளையில் இதுவரை வேலைக்குத் திரும்பாத டாக்டர்கள் பற்றிய விபரங்களை சுகாதாரத் திணைக்களம் சேகரித்து வருகிறது. இதுவரை வேலைக்குத் திரும்பாத டாக்டர்கள் பற்றிய சகல விபரங்களையும் இவ்வார இறுதிக்குள் சேகரித்து அனுப்புமாறு சுகாதார திணைக்களம், சகல சுகாதார சேவை அத்தியட்சகர்களையும் பணித்துள்ளது.

இதே சமயம் தம்மைச் சொந்த இடங்களுக்கு இடமாற்றம் செய்யும் பல டாக்டர்கள் விடுத்த கோரிக்கை பற்றி ஆராயப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கல்வியங்காட்டில் 12 பரப்புக் காணியும் பெரிய வீடும் விற்பனைக்குண்டு. துண்டுகளாகவும் வாங்கலாம். விபரங்களுக்கு 92, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 7230

## வாடகைக்கு

சென். பற்றிக்ஸ், சென். ஜோன்ஸ், சுண்டிக்குளி மகளிர் பாடசாலைகளுக்கு மத்தியில், மெயின் வீதிக்கருகாமையில், நவீன வசதிகள் கொண்ட 3 படுக்கை அறைகள் உள்ளதும், குழாய் நீர் வசதியுள்ளதுமான புதிய அழகிய வீடு வாடகைக்குண்டு வாடகை 250/- விபரங்களுக்கு 422, ஸ்ரான்லி வீதி, றெயில்வே பங்களா, யாழ்ப்பாணம். 3 மணிக்குப்பின் தொடர்பு கொள்க. 7229

பட்டிருப்பு, பெரிய போரைதீவில் தபால் கந்தோருக்கருகில் பலசரக்குக் கடைக்குரிய தளபாடங்களுடன் இரு கடைகள், வீடு மற்றும் சகல வசதிகளுடன் வாடகைக்குண்டு. விபரங்களுக்கு:- சோ. சிவகுரு, 68, K, கன்னதிட்டி ரோட், யாழ்ப்பாணம், அல்லது சோ. சிவகுரு, பெரிய போரைதீவு போஸ்ட். 7232

## தேவை

சோடா விற்பனை வாகனத்திற்கு சோடா பெட்டி ஏற்றி இறக்கி விற்பனை செய்ய அனுபவமுள்ள ஓட்டுநர் தேவை. நேரில் வரவும். ''பிள்ளையார் ஸ்ரோர்ஸ்'', இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 7233

ஆண் மழுப்புவோரும் (Fusers) வேலை பழகுபவர்களும் (Carriers) உடனடியாக தேவை. நேரில் வரவும். யாழ். பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7231

# நாவற்குழிப் பாலத்தில் வாலிபரின் சடலம்!

மட்டுவில், வியாழன்

நாவற்குழி பாலத்தின்கீழ் இனம் தெரியாத வாலிபர் ஒருவரின் சடலத்தை சாவகச்சேரிப் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

இதுவரை எவராலும் அடையாளம் காண்பபடாத இச் சடலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரி சவச்சாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி சாவகச்சேரிப் பொலிசார் தீவிர புலன் விசாரணை செய்து வருகின்றனர். (இ)

# 156 பிரயாணிகளுடன் விமானம் கடத்தல்

பம்பாய், செப். 28

156 பிரயாணிகளுடன் பம்பாயிலிருந்து பாங்கொக் சென்ற விமானம் ஒன்று ஜப்பானிய 'செஞ்சேனை'யினரால் கடத்திச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஜப்பானுக்குச் சொந்தமான "டி ஸி-8" என்ற இந்த விமானம் பம்பாயிலிருந்து புறப்பட்ட மறுகணமே கடத்தல் காரர்களால் வேறு திசைக்குக் கடத்திச்செல்லப்பட்டதாம்.

பாரிஸிலிருந்து டோக்கியோ சென்ற இந்த விமானம் பம்பாயில் இறங்குவதற்கு முன்னர் ஏதென்ஸ், கெய்ரோ, கராச்சி ஆகிய இடங்களில் இறங்கியதென்றும் விமானம் கடத்தப்பட்டபோது விமானத்தில் 19 ஜப்பானியர், 5 இந்தியர், 2 பிரிட்டிஷ்காரர் உட்பட 140 பயணிகளும் 16 விமானச் சிப்பந்திகளும் இருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடத்தப்பட்ட விமானம் டாக்காவில் இறக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# கடற்படை சாரதி விடுதலை

மட்டுவில், புதன்

கைதடி 'ட்ரக்' மோதல் வழக்கில் எதிரியை விடுதலை செய்து சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் தீர்ப்பளித்தார்.

கைதடிச் சந்திக்கு அருகாமையில் 1976ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ம் திகதி அதிகாலை நாடகம் பார்த்துவிட்டு வந்த பாதசாரி ஒருவரை மோதி மரணம் விளைவித்ததாக காரைநகர் கடற்படை முகாமைச்சேர்ந்தசாரதிசி.பெரேரா மீது இவ்வழக்கில் சாவகச்சேரி பொலிசார் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

எதிரி தரப்பில் சட்டத்தரணி திரு. செ. அம்பிகைபாலன் ஆஜரானர்.

பொலிஸ் தரப்பில் சட்டத்தரணி திரு. சி. பாலகிருஷ்ணர் ஆஜரானர். (உ)

# "பிரணவத்தின் மூலமே சகலதும் உருவாகின்றன"

## — ஐ. கைலாசநாதக்குருக்கள்

யாழ்ப்பாணம், வியா.

''கலியுக வரதனகிய முருகப்பெருமானின் அருளின் படியே சங்காபிஷேகம் முதலான கிரியைகள் யாவும் நிறைவேறுகின்றன. இவை எல்லாம் நாம் நினைத்துச் செய்வன அல்ல' என்று நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய பிரதம குருவான பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் நேற்று வண்ணை நல்ல தண்ணீர்க் கிணற்றடி ஸ்ரீஞான வைரவகோவில் சங்காபிஷேகத்தை நடத்திவைத்துச் சொற்பொழிவு நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

ஸ்ரீஞானவைரவசுவாமி கோவில் ஸ்ரீ முருகப்பெருமானின் பெருஞ்சாந்தி விழாவின் அங்கமாகிய மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா நேற்றுக்காலை நடைபெற்றது.

கைலாசநாதக் குருக்கள் மேலும் கூறியதாவது: பிரணவத்தில் இருந்தே அனைத்தும் உருவாகின்றன என்று நமது சமயம் உணர்த்துகிறது. சங்காபிஷேகங்கள் நாட்டில் பஞ்சம், பட்டினி என்பன தலைதூக்குகையிலும் நடத்தப்படுவதுண்டு''. (உ)

# யாழ். எம்.பிக்கு தந்தி

யாழ்ப்பாணம், வியா.

நெடுந்தீவில் கடந்த ஒருவாரமாக குழாய்நீர் விநியோகம் தடைப்பட்டிருப்பதாகவும், இதனல் மக்கள் பெரும்கஷ்டத்துக்குள்ளாகியிருப்பதாகவும் தெரிவித்து நெடுந்தீவு கிழக்கு கிராமமுன்னேற்றச்சங்கத் தலைவர், யாழ். எம். பி. திரு. வே. யோகேஸ்வரனுக்கு தந்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

தீவுப்பகுதி உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் வெளிநாடு சென்றிருப்பதால் எம். பியை இதுகுறித்து உடன் நடவடிக்கை எடுக்கும்படி தந்தியில் கேட்கப்பட்டுள்ளது. (ம)

# குற்றவாளிகளை தண்டிக்கும்வரை வேலைக்குத் திரும்பமாட்டார்கள்

யாழ்ப்பாணம், வியா

நாட்டில் நடைபெற்ற இனக் கலவரத்துக்கு காரணமானவர்கள் மீது விசாரணை நடத்தி அவர்கள் தண்டிக்கப்படும் வரை தாம் வேலைக்குச் செல்வதில்லை என்று பாதிக்கப்பட்ட உள்ளூராட்சி தமிழ் ஊழியர்கள் சங்கத்தினர் தீர்மானித்திருக்கின்றனர்.

சங்கத்தின் தலைவர் திரு. பொன் காங்கேயநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தாய்ச் சங்கமான பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர் கழகம் எடுக்கும் சகல முடிவுகளையும் ஆதரிப்பதென்றும், அடுத்த மாதம் 8-ம் திகதி நடைபெறவிருக்கும் தாய்ச் சங்கத்தின் கூட்டத்தில் கலந்து கொள்வது என்றும் மேலும் தீர்மானிக்கப்பட்டது.

இடமாற்றம் கோரும் உள்ளூராட்சி ஊழியர்கள் இம்மாதம் 30-ம் திகதிக்கு முன்னர் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கும்படியும் பிரதியொன்றை தமக்கு அனுப்பி வைக்கும்படியும் சங்கம் கேட்டிருக்கிறது.

பெருந்தொகையான உள்ளூராட்சி ஊழியர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் செயலாளர் திரு. மா. குலேந்திரன் அரசின் பாதுகாப்பு நடவடிக்கைகள் திருப்தியற்றவை என்றும் வேலைக்குத் திரும்பிச் சென்ற பல தமிழ் ஊழியர்கள் பல இடங்களில் மீண்டும் தாக்கப்பட்டிருப்பதாகவும் கூறினர்.

உள்ளூராட்சி ஊழியர்கள் இடமாற்றம் கோருவது தொடர்பான விண்ணப்பப் படிவங்களையும் சங்கம் ஊழியர்களுக்கு வழங்கும். இச்சங்கத்தின் காரியாலயம் திருநெல்வேலி, அம்மன் வீதியில் இருக்கின்றது. (ம)

# 2ந் திகதி நாடு திரும்புவார்

யாழ்ப்பாணம், வியா.

பல்கேரியாவில் நடைபெறும் சர்வதேசபாராளுமன்றக் கூட்டத் தொடரில் இலங்கைப் பிரதிநிதிகளாக கலந்து கொண்ட தீவுப்பகுதி தேசியப் பேரவை உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் சாவகச்சேரி தேசியப் பேரவை உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினமும் கலந்து கொண்டனர்.


யா வேலணை மத்திய மகா வித்தியாலயம்

HNCE செயற்திட்ட நிதிக்காக

தெய்வ மகன்

படக்காட்சியாழ்ப்பாண

சாந்தி தியேட்டரில் 1-10-77 சனிக்கிழமை

காலை 10-30 மணிக்கு நடைபெறும்

ஏற்கனவே விலைப்பட்ட அனுமதிச் சீட்டுக்களும் செல்லுபடியாகும்.

அதிபர்

வேலணை ம. ம. வி.

வேலணை.

28-9-77. 7238


# நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம் சடு/701

வயிரவி கதிரவேலு, வல்வெட்டி

வாதி

எதிராக

1. நடராசா தேவரத்தினமும் பெண்
2. றேசலீனும்
3. அந்தோனிப்பிள்ளை இராசநாயகம் சகலரும், பெரிய காட்டுத் தேவன்துறை, காங்கேசன்துறை.

பிரதிவாதிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரு காணிகள் 1977-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7-ம் திகதி (1977-11-7) திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

## தீர்வைத் தொகை

மேற்குறித்த பிரதிவாதி குறித்த வாதிகளுக்கு ரூபா 5500/-ம் மேலும் ரூபா 5000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 20 வட்டிவீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1975-ம் ஆண்டு வைகாசி மாதம் 29-ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1975-ம் ஆண்டு மார்கழி மாதம் 5-ந் திகதி வரையுமான வட்டியும், அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு 662-65 கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

## ஆதனடாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று ''பெரியகாட்டுத் தேவன்துறை'' புதுக்காடு நில. பர. ($1\frac{1}{2}$) ஒன்றரையும் இதற்கெல்லை கிழக்கு, சந்தியாப்பிள்ளை சின்னப்புவுக்கும் மறுபேருக்குரிய வாதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு மரியாம்பிள்ளை அல்போன்ஸஸ் பெண் சிசிலியா புஸ்பராணிக்கும் பங்காளருக்குமுரிய வாதனம். தெற்கு விசேந்திப்பிள்ளை செபமாலைக்கும் மறுபேருக்குமுரிய வாதனம். இதடங்கலும்.

2. மேற்படி இறை பணற்குண்டு அல்லது தாளையடி வளவு (11) பதினொருகுளி இதற்கெல்லை கிழக்கு வல்விபுரம் இராமசாமியின் உரிமைக்காரரின் ஆதனம் வடக்கு கடல் மேற்கு ஐயாமுத்து நடராசா பெண் இளையபிள்ளையின் ஆதனம் தெற்கு ஞானமுத்து பெண் விக்ரோறியாபிள்ளையினதனம் இதனடங்கலும்.

சி. ஆ. த. வடிவேலு, J. P.

நீதிமன்ற விற்பனை

ஆணையாளரும் விலைமதிப்பாளரும்.

''வடிவேல் உதயம்''

காங்கேசன்துறை வீதி,

கோண்டாவில்.

16-9-1977. 7234

# பயங்கர விமான விபத்தில் 17 பேர் பலி! 60 பேர் தப்பினர்!!

## கோலாலம்பூரில் சம்பவம்

கோலாலம்பூர், செப். 28

கோலாலம்பூரில் நேற்று இடம்பெற்ற பயங்கர விமான விபத்தொன்றில் 17 பேர் பலியாகினர் என்றும் 60 பேர் தெய்வாதீனமாக உயிர்தப்பினர் என்றும் கோலாலம்பூர்ச் செய்திகள் தெரிவிக்கின்றன.

டோக்கியோவிலிருந்து கோலாலம்பூர் வந்துகொண்டிருந்த 'டி. ஸி-8' என்ற ஜப்பானிய விமானம் கோலாலம்பூரிலிருந்து 8மைல் தொலைவில் உள்ள ரப்பர் தோட்டம் ஒன்றில் விழுந்து நொருங்கியபோது 17 பேர் பலியானார்கள் என்றும் 41 பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விபத்து நடைபெற்றபோது விமானததில் விமானிகள் உட்பட 77 பேர்இருந்தனர். இவர்களில் 19 பேர் எதுவித காயமுமின்றி உயிர்தப்பினர்.

விபத்து நிவாரண வேலைகளை மேற்கொள்வதற்காக ஸ்தலத்திற்கு விரைந்த டாக்டர்கள் அதிகாரிகள் ஆகியோர் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் 5 மணித்தியாலம் வரை பயணம்செய்து ஸ்தலத்தைச் சென்றடைந்தனராம். (இ)

## புடவைவிற்பனை நிலையத்தில் இரவுவேளை துணிகரத்திருட்டு

யாழ்ப்பாணம், வியா.

அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் மல்லாகத்தில் இயங்கும் புடவைவிற்பனவு நிலையத்தில் துணிகரத்திருட்டு இடம்பெற்றுள்ளது

இரவுவேளை இந்நிலையத்தின் பின்புறக் கதவைத் தகர்த்த இனந்தெரியாத நபர்கள் உள்ளே புகுந்து பெருந்தொகையான ஜவுளிகளைத் திருடிச் சென்றுள்ளனராம்.

சம்பவதினம் இந்நிலையத்தில் சுமார் 50,000 ரூபா பெறுமதிமிக்க துணிவகைகள் இருந்தனவாம்.

திருடப்பட்ட துணிவகைகளின் பெறுமதி பற்றிய கணக்கீடு இன்னமும் முடியவில்லை. இத்திருட்டு பற்றி கிடைத்த தகவலையடுத்து சுன்னுகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜனுப் இ. ஏ. ஏ. காதர் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணை நடத்தினர்.

இதுவரைஎவரும் கைதுசெய்யப்படவில்லை. (உ)

# இவர்களுக்கு நல்லூர் தமிழ் மாணவர் பேரவை உதவும்

## விபரம்தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா.

பாதிக்கப்பட்டு வடபகுதிக்கு வந்துள்ள தமிழ் மாணவர்கள் தங்கள் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளும்பொருட்டு நல்லூர் தமிழ் மாணவர் பேரவையினருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்

அகதிகளான மாணவர்களுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்கள், பாடசாலைப் புத்தகங்கள் முதலியவற்றை வழங்குவதற்கு இப்பேரவையினர் ஒரு நிதியினைத் திரட்டியுள்ளனர்.

இந்நிதி சகல பாடசாலை மாணவர்களிடையே திரட்டப்பட்டது. இந்நிதிக்குச் சகல அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மனமுவந்து பணவுதவிகளைச் செய்தனர் என்றும் இந்நிதியினைத் திரட்டுவதில் இவர்கள் பெரும் ஆர்வம் காட்டினர் என்றும் மாணவர் பேரவைத் தலைவர் என். ரி. ஜெகன் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

தற்போது திரட்டப்பட்டுள்ள நிதியிலிருந்து பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவுமுகமாக மேற்படி பாதிக்கப்பட்ட மாணவர்களிடம் இருந்து விபரங்கள் கோரப்படுகின்றன.

பாதிக்கப்பட்டு வந்துள்ள மாணவர் தாம்தாம் தங்கியுள்ள பகுதி கிராமசேவையாளர்களிடம் இருந்து உத்தரவாதப் பத்திரங்கள் பெற்றுக்கொண்டு தமது குடும்ப விபரம் அடங்கிய விண்ணப்பம் ஒன்றினை அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர்.

இவர்கள் என். ரி. ஜெகன் தலைவர், தமிழ் மாணவர் பேரவை 37, செட்டித்தெரு. நல்லூர் என்ற முகவரிக்குத் தொடர்புகொள்ளுமாறுவேண்டப்படுகின்றனர். (கா-உ)

## மயானம் புனரமைப்பு

மாவிட்டபுரம், புதன்

தெல்லிப்பளையிலுள்ள சைவ சமயத்தவரது மயானத்தைப் புனரமைப்புச் செய்யும் முயற்சியில் தெல்லிப்பழை லயன்ஸ் கழகக் கிளையினர் ஈடுபட்டுள்ளனர்.

பற்றைகளையும் செடிகளையும் சிரமதான முறையில் அகற்றி மயானத்தைத் துப்புரவுசெய்த கிளையினர் மயான மண்டபத்தையும், கிணற்றையும் பொதுமக்களிடமிருந்து நிதியுதவி பெற்றுச் சீரமைக்க முனைந்துள்ளனர். (உ)

## தற்காலிக நியமனம்

(கொழும்பு)

அண்மையில் வேலைநீக்க உத்தரவு வழங்கப்பட்ட மக்கள் வங்கி ஊழியரில் ஒருபகுதியினருக்கு மீண்டும் தற்காலிக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்ட தினமான இவ்வருடம் மேமாதம் 18ம் திகதிக்குப்பின்னர் மக்கள் வங்கிகளில் நியமனம் பெற்ற ஊழியர்களுக்கு அண்மையில் வேலைநீக்க உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

இம்மாதம் 30ம் திகதியுடன் இவர்கள் வேலை இழந்தவர்களாகக்கருதப்படுவர்என அறிவிக்கப்பட்டிருந்தது.

இப்போது இவர்களில் 181 பேருக்கு தற்காலிக நியமனம் வழங்கப்பட்டுளது. (இ)

# இந்திரா ஆட்சியின் நெருக்கடிநிலை, ஒழுங்கீனம்

## ஷா கமிஷன் விசாரிக்கிறது

புதுடில்லி, செப்.28

இந்திராவின் ஆட்சியில் நெருக்கடிநிலை அமுலில் இருந்தபோது இடம்பெற்ற ஒழுங்கீன நடவடிக்கைகள்பற்றி ஆராய நியமிக்கப்பட்ட ஷா கமிஷன் நாளை வியாழக்கிழமை தனது பகிரங்க விசாரணையை ஆரம்பிக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

இக்கமிஷன் முதலில் அரசாங்க ஊழியர்கள் நியமனங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஒழுங்கீனங்கள் பற்றியும் விசாரணை நடத்தும்.

அடுத்தவாரமளவில் தகவல் தொடர்பு சாதனங்களின் நடவடிக்கைகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஒழுங்கீனங்கள் பற்றிய விசாரணைகள் நடைபெறும். (இ)

## இந்திரா எதிர்த்தாக்கு!

# "பொய்யர் கூட்டம் பற்றி நான் கவலைப்படவில்லை"

புதுடில்லி, செப். 28

வெளிநாட்டு வங்கிகளில் 350 கோடி ரூபாவை மூதலீடு செய்திருக்கிறீர்களாமே, என்று காஷ்மீருக்கு விஜயம் செய்திருந்த முன்னுள் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியை நிருபர்கள் கேட்டபோது, 'எங்கள் குடும்பத்தில் என்ன சொத்து இருக்கிறது, இருந்தது என்பதுபற்றி உலகத்தவர்க்கு நன்கு தெரியும். பொய்யர்களின் கூட்டமொன்று பேசுவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை' என்று ஆவேசமாக பதிலளித்தார் திருமதி இந்திரா காந்தி.

நிருபர்களின் மற்றொரு கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், நெருக்கடி நிலமையின் போது ஏற்பட்ட தவறுதல்கள் குறித்து வருந்துவதாகவும் ஆனால் நெருக்கடி நிலைமை சரியே என்றும் கூறினர்.

நெருக்கடி நிலைமையின் போது அரசின் கொள்கைகள் தவறாக அமுல் படுத்தப்பட்டன என்று கூறிய திருமதி இந்திரா காந்தி பத்திரிகை தணிக்கை பற்றி உதாரணம் காட்டினர்

படிப்படியாக பத்திரிகைத் தணிக்கையைத் தளர்த்திவிடலாம் என்று தான் பத்திரிகைத் தணிக்கை கொண்டுவரப்பட்டது. ஆனுல் துரதிஷ்டவசமாக அது செய்யப்படவில்லை என்று கூறினர்.

பத்திரிகைகளை கண்காணிக்க ஒரு கொடுமையான மனிதரை அல்லவா தேர்ந்தெடுத்திருந்தீர்கள் என்று செய்தியாளர் கேட்டதும், பதில் எதுவும் கூருமல் மௌனமாக இருந்தார் திருமதி இந்திரா காந்தி. (கெ)

## காலராவுக்கு 79பேர் பலி

மாடஸ்கஸ், செப்.28

சிரியா ஜோர்டான் ஆகிய இருநாடுகளிலும் காலரா நோய் வேகமாகப் பரவிவருகின்றது என்றும் இதுவரை 79பேர் இந்நோய்க்குப் பலியானர்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

# காங்கேசன்தொழிற்சாலையில் அகதிகளுக்கு வேலைவாய்ப்பு

## வழங்குமாறு தொழிற்சங்கம் கோரிக்கை

மாவிட்டபுரம், புதன்

"காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் வேலைகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ள "கொங்கிறீற்" பகுதியை மீண்டும் ஆரம்பித்து வடபகுதிக்கு அகதிகளாகவந்து வேலையற்றுத் தவிப்போருக்கு வேலை வாய்ப்பை வழங்குக".

இவ்வாறு கைத்தொழில் மந்திரி, இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் ஆகியோரைக் கோரும் தீர்மானமொன்று காங்கேசன்துறை சீமெந்து பொதுத்தொழிலாளர் யூனியனின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யூனியன் காரியாலய முன்றலில் திரு. ஆ. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் நிறைவேறிய இத் தீர்மானத்தில் மேலும் தெரிவிப்பதாவது:-

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் இயங்கிவந்த கொங்கிறீற் பகுதி கடந்த பல வருடங்களாக வேலைகள் நிறுத்தப்பட்டு மூடப்பட்டுள்ளது. தொழிற்சாலையில் சீமெந்தும் மற்றும் தேவையான மூலப்பொருட்கள் இப்பகுதியில் இலகுவாகவும் கிடைப்பதால் இப்பகுதியை மீண்டும் ஆரம்பிக்க ஆவன செய்யவேண்டும். தென்னிலங்கையிலிருந்து அகதிகளாக வடபகுதி வந்து வேலையற்றுத் தமது குடும்ப வாழ்வை நடத்த முடியாது கஷ்டமுறும் தமிழருக்கு இங்கு வேலை வாய்ப்பளித்து அவர்களது கஷ்டத்தைப் போக்குவதுடன், கொங்கிறீற்பொருட்கள் நியாயமான விலையில் மக்களுக்குக் கிடைக்கவும் வழி செய்யவும்.

இத்தீர்மானத்துடன் தொழிலாளர்களது கோரிக்கைகளை வென்றெடுக்க நடவடிக்கை எடுப்பது தொழிலாளரை எதிர்நோக்கும் பிரச்னைகளை உடனுக்குடன் தீர்ப்பது முதலான தீர்மானங்களும் நிறைவேறின. (உ)

# நியூட்ரோன்குண்டு உற்பத்தியை தடைசெய்க

## ஐ. நா.வில் ரஷ்யா கோரிக்கை

நியூயோர்க், செப். 28

அமெரிக்காவின் நியூட்ரோன் குண்டு உற்பத்தியை சட்டவிரோதமாகப் பிரகடனம் செய்து அதைத் தடை செய்ய வேண்டும்.

இவ்வாறு சோவியத் யூனியன் வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிக்கோ ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் கோரிக்கை விடுத்தார்.

ஐ. நா. பொதுச் சபையில் நீண்ட நேரமாக திரு. குரோமிக்கோ உரைநிகழ்த்தினர்.

நிலத்துக்கடியில் நடத்திவரும் சகல அணு சோதனைகளையும் இடைநிறுத்த சோவியத் யூனியன் தயாராக உள்ளதாகவும் திரு. குரோமிக்கோ தெரிவித்தார். (இ)

## குரோமிக்கோ-கார்ட்டர் பேச்சுவார்த்தை

வாஷிங்டன், செப், 28

சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிக்கோ அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டருடன் இன்று பேச்சுவார்த்தை நடத்தினர்.

ஆயுதக்கட்டுப்பாடு பற்றி இருவரும் தீவிர ஆலோசனை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் பேச்சுவார்த்தையை அடுத்து அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே ஆயுதக்கட்டுப்பாட்டு ஒப்பந்தம் ஒன்று விரைவில் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

# அகதிகளுக்கு

## நோர்வே திருச்சபை உதவி

யாழ்ப்பாணம், வியா.

நோர்வே நாட்டில் உள்ள நோவோஜியன் திருச்சபை நிவாரண சபையின் பிரதிநிதி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னர் அகதிகள் முகாம்களுக்குச் சென்று பார்வையிட்டபின் நிவாரண சபையின் சார்பில் பல்லாயிரம் ரூபா பெறுமதிமிக்க பொருட்களை அன்பளிப்பாக வழங்கினர்.

ஆடைகள், பாய், சீனி பிங்கான் கோப்பைகள், குவளைகள், பெரும் கிடாரங்கள் முதலானவை இதில் அடங்கும். (பன்-நிஉ)

## பால்க்கிவாலா அமெரிக்க தூதுவர்

புதுடில்லி, செப்.28

இந்தியாவின் அமெரிக்கத் தூதுவராக திரு. எம். ஏ. பால்க்கிவாலா நியமனம் பெற்றுள்ளார்.

அக்டோபர்மாதம் 1ம் திகதி திரு. பால்க்கிவாலா பதவி ஏற்றுக்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

# யாழ். பெரியாஸ்பத்திரியில் புற்றுநோய் சிகிச்சை மீண்டும் ஆரம்பம்

## வைத்திய நிபுணர் குக் மாதம் இருமுறை வருவார்

யாழ்ப்பாணம், வியா.

யாழ். மாவட்டத்திலும் அதனைச் சூழவுள்ள தமிழ்ப் பகுதிகளிலும் உள்ள புற்று நோயாளர்களுக்கு எதிர்வரும் சனிக்கிழமை முதல் மாதத்திற்கு இருதடவைகள் யாழ். பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் வாய்ப்புக் கிடைக்கவிருக்கிறது.

மஹரகம புற்றுநோயாளர் சிகிச்சைப் பிரிவைச் சேர்ந்த வைத்திய நிபுணர் கலாநிதி ஆர். ராஜாகுக் மேற்படி சிகிச்சையினை அளிக்கவிருக்கிறார்.

யாழ். பெரியாஸ்பத்திரியில் புற்றுநோயாளர் சிகிச்சைப் பிரிவு 1961-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1973-ம் ஆண்டு வரை செயற்பட்டு வந்தது.

1973-ம் ஆண்டுக்குப்பின் புற்றுநோய் வைத்திய நிபுணர் இல்லாமல் இப்பிரிவு இயங்காத நிலையில் இருப்பதனால் நோயாளர் அடைந்துள்ள இன்னல் குறித்து யாழ். பெரியாஸ்பத்திரி கமிட்டியும் வடபகுதிப் புற்றுநோய்த் தடுப்புச்சங்கமும் சுகாதார அமைச்சும் ஏற்கெனவே பல தடவைகள் நினைவூட்டிவந்தன.

இனக்கலவரத்தின் எதிரொலியாக சிகிச்சைப்பிரிவு யாழ்ப்பாணத்தில் மீண்டும் இயங்க வேண்டியது மிக அவசியமும் அவசரமுமானதாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

இந்நிலையில் மஹரகம புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு வைத்திய நிபுணர் மாதத்தில் முதல் சனிக்கிழமையும், மூன்றும் சனிக்கிழமையும் யாழ். பெரியாஸ்பத்திரியில் புற்றுநோயாளர்க்குச் சிகிச்சையளிக்கத் தாமே முன்வந்துள்ளார்.

முதல் சிகிச்சை யாழ். பெரியாஸ்பத்திரியில் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகிறது. [உ]

---

# அகதிகள் புனர்வாழ்வு: ஒரு யோசனை

வடக்குக் கிழக்கிலங்கைத் தமிழ் சமுதாயத்திற்கு இன்று ஒரு பெரும்பொறுப்பு உருவாகியிருக்கிறது. அதை அவர்கள் தட்டிக்கழிக்கவோ பராமுகமாக இருக்கவோ எண்ணினால் அவர்கள் பெரும் துரோகிகள் என்றும் சமுதாய மனச்சாட்சி அற்றவர் என்றும் கருதப்படுவர்.

இன்று அபயந்தேடி வடக்கிலங்கையை நோக்கி வந்த, வந்துகொண்டிருக்கிறவர எண்ணும் மலையகத் தமிழ் மக்களையே நாம் கருத்தில் கொள்கிறோம்.

எமது சமுதாயத்தில் அன்னதானம் பெரும் புண்ணியம் என்றகருத்து மிதமிஞ்சி அழுத்தப்பெற்றமையால் நாம் எங்கள் மத்தியில் அபயம் கேட்டு வந்த மலையகத்தமிழ்மக்களுக்கு அகதிகள் முகாம்களில் வைத்து அன்னமிடும் கடமைக்கு அப்பால் சிந்திக்காமல் இருக்கிறோம். மேற்கத்திய தத்துவ ஞானத்தின்படி இடர்ப்பட்ட ஒருவருக்கு உதவிசெய்தல் புண்ணியம் என்று கருதப்படுவதில்லை. அன்னாருக்கு உதவிசெய்தல் சமுதாய ரீதியான கடமை என்றே கருதுவர். அதன்பிரகாரம் இடர்ப்பட்டோருக்குச் செய்யும் உதவியாவது அவர்கள் தம் சொந்தச் சக்தியால் தாமாகவே இயங்கும் நிலையை அடைவதற்குவேண்டிய உதவியைச் செய்தலாகும். எம்மத்தியில் அபயம்தேடி வந்த மலையகத் தமிழ்மக்கள் தம் சொந்தக்காலில் நிற்கக்கூடியநிலையை எய்துவதற்கு வழிவகைசெய்ய வேண்டியது வடஇலங்கைத் தமிழர்களின் கடமையாகும்.

அபயம்தேடி நம்மத்தியில் வந்திருக்கும் மலையகமக்கள் சாதாரண தொழில் அதாவது சரீரவலுவால் மட்டும் செய்யக்கூடிய தொழில் செய்யும் சக்தியுடையவர்கள். அவர்கள் பெரும்பாலும் கடினமான வேலைசெய்யப்பின்னிற்காதவர்கள். நாளாந்தம் பல்வேறு தொழில்களைச்செய்து பிழைப்பதே அவர்கள் செயற்றிறமை. நமது பிரதேசத்தில் விவசாயத்திலும் இன்னோரன்ன பிற சாதாரண தொழில்களிலும் அவர்கள் நாளாந்தப் பிழைப்பாக இயங்க வழிசெய்து கொடுத்தால் அவர் தமது சக்தியால் வாழ்க்கை நடாத்திக் கொள்வர். எனவே நகர்ப்புறங்களிலும் சம்பளத்திற்கு வேலைவாய்ப்புள்ள வெவ்வேறு இடங்களில் அவர்கள் வதிவதற்குவகைசெய்தால் நிலைமை சில நாட்களுள் சுமுகமாகிவிடும்.

அவர்கள் தம்இனத்தவர்களைக்கொண்ட குடும்பங்களுடன் சேர்ந்துவாழவே விரும்புவர். ஆகவே பல்வேறு இடங்களில் அதாவது சம்பளத்திற்கு வேலைசெய்ய வாய்ப்புள்ள இடங்களில், அத்தகையோர் பத்துப்பன்னிரண்டு குடும்பங்களாக ஓர் இடத்தில் வாழவழி செய்வது போதுமானது நம் பிரதேசத்தில் அநேக கோவில் நிலங்கள் உள்ளன. அவைகளுள் சிலவற்றை இந்த அகதிகளாக வந்த மலையகத் தமிழ் மக்கள் குடியிருப்பதற்கு வசதி செய்து கொடுப்பது பொருத்தமானது. அத்தகைய இடங்களில் சிறு வீடுகளை அமைத்து அவர்கள் வதிவதற்கு வகை செய்தால் அவர்கள் தமது சொந்த முயற்சியால் வாழ்க்கை நடாத்திக்கொள்வார்கள் எனவே நமது சமுதாயத்தில் மதிப்புள்ள பெரியார்கள் இத்தகைய நடவடிக்கைகளைக் கையாள முன்வரல்வேண்டும். இரண்டு மூன்று இடங்களில் இத்தகைய வாய்ப்பைச்செய்து கொடுத்தால் பலவேறு கிராமங்களின் தலைவர்களும் தாமாகவே முன்வந்து அத்தகைய நடவடிக்கையை நிறைவேற்றுவர். மலையகத் தமிழ் மக்கள் கடினமான உழைப்புக்குப் பின்நிற்காதவர்கள் நம்நாட்டில் உண்மையில் விவசாயச் செய்கைக்குப் போதிய ஆட்பலமே இல்லாதிருக்கிறது.

வவனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவுப் பிரதேசங்களிலும் அவ்வாறு சில உறைவிடங்கள் ஏற்படுத்திக் கொடுத்தல் மலையக மக்களுக்கும் நன்று எங்களுக்கும் நன்று இப்பிரதேசங்களில் பல இடங்களில் சிங்கள மக்களே சில விவசாயத்துறை வேலைகளைச் செய்வதுவழக்கம் இனி மேல் அவர்கள் அங்கு வருவார்கள் என நம்பமுடியாது.

அப்பிரதேசங்களில் போதிய நிலம் தனியார் வசம் உண்டு அவர்கள் பூதான இயக்கமாக அவற்றை இந்தச் சீரிய சேவைக்கு வழங்கவும் முன்வரலாம். இந்த நல்ல கைங்கரியத்தை நிறைவேற்ற சமுதாய மனச்சாட்சி படைத்த மக்கள் முன்வரல்வேண்டும்.

— சோ.வன்னியசிங்கம்

---

பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க ஊழியர்கள்

# அகதிகளுக்கு ரூ.1 லட்சத்து 15 ஆயிரம் வழங்குவர்!

பண்டத்தரிப்பு, புதன்

பண்டத்தரிப்புப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் தங்களது ஒருமாத சம்பளப் பணத்தை அகதிகளின் புனர்வாழ்வு நிதிக்கு வழங்குவதென்று தீர்மானித்துள்ளார்கள். இதன் பிரகாரம் இந்த ஊழியர்களின் சார்பில் அகதிகள் புனர்வாழ்வு நிதிக்கென ஒருலட்சத்து 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதைத்தவிர பண்டத்தரிப்புப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சிக்கன சேமிப்புச் சங்கத்தின் சார்பிலும் ஒரு குறிப்பிட்டதொகை பணம் அகதிகள் புனர்வாழ்வு நிதிக்கு வழங்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக இச் சங்கத்தின்பொதுசனத் தொடர்பு அதிகாரியான திரு. எஸ். நடராசா தெரிவித்தார். (அ)

## அகதிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், வியாழன்

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தினர் வன்முறையால் பாதிக்கப்பட்டு கைதடி ஆயுர்வேதக் கல்லூரியில் உள்ள அகதிகளுக்கு அரிசி முதலான உப உணவுப்பண்டங்களை கொடுத்துதவினர். (உ)

## இன்று விசேஷ பூசை

யாழ்ப்பாணம், வியா.

வண்ணை சாந்தையர் மடம் கற்பகவிநாயகர் கோவில் வைரவர் விசேஷபூசை இன்று பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவிருக்கிறது. ஆசிரியர் திரு. ச. விநாயகமூர்த்தி ‘மணிவார்த்தை’ என்னும் பொருள் பற்றி உபந்யாசம் நிகழ்த்துவார். சங்கீதபூஷணம் க. மாணிக்கவாசகர் பண்ணிசைக்கச்சேரி நிகழ்த்துவார். (அ)

## தேசியதினக் கூட்டம்

ஹட்டன், புதன்

ஹட்டன் டிக்கோயா நகர சபை மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் மக்கள் சீனக்குடியரசின் தேசியதினம் பொதுக் கூட்டம் நடைபெறவிருக்கிறது. (உ)

## கந்தரலங்கார உரைநூல்

சுழிபுரம், புதன்

சமயப்பிரசாரகர் திரு. ச. மருதபிள்ளை கந்தரலங்காரத்திற்கு புதிய உரை எழுதியுள்ளார்.

இவ்வுரை நூல் வெளியீடு வரும் நவராத்திரி காலத்தில் வெளியிடப்படவுள்ளது. நூல் வெளியீட்டு விழா வட்டுக்கோட்டை அடைக்கலம்தோட்டக் கந்தசாமி கோயிலில் நடைபெறவுள்ளது. வட்டுக்கோட்டை திருமுறைக் கழகத்தின் சார்பாக வெளியிடப்படும் இந்நூல் வெளியீட்டு அன்று நூல் ஆசிரியர் பொன்னாடை போர்த்துக்கௌரவிக்கப்படவுள்ளார். (உ)




## 29—9—77 வியாழன்

(செய்திகள்: காலை 6-30 பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

6-05 சைவநற்சிந்தனை வி. வி. கே. ஆறுமுகம், 6-50 பஜனை, 7-05 இசைக்கோவை, 7-35 வயலின் இராஜராஜேஸ்வரி சந்திரசேகரம்.

மாலை 6-30 மழலைச் செல்வம் இந்திராணி தாமோதரம்பிள்ளை, 6-45 இசைப்பயிற்சி ஏ. கே. கருணாகரன், 7-20 மகளிர் மன்றம் அன்னலக்ஷ்மி ராஜதுரை, 7-35 மெல்லிசைப் பாடல்கள், 7-50 பொருளாட்சி உலகப் பொருளாதார ஸ்தலங்கள் ஈஸ்வரதாஸன், 8-05 திருக்குர்ஆன் விளக்கம், 8-20 மணிமொழிகள், 8-30 முஸ்லிம் நிகழ்ச்சிகள் 9-30 அறிவியல் அரங்கு, 10-00 மெல்லிசை வாத்தியவிருந்து. (கெ)

## சாக்குத் தொழிற்சாலை

கொழும்பு, புதன்

வருடாந்தம் 60 லட்சம் சாக்குகளை உற்பத்தி செய்ய சணல் கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளது.

இதற்கென சாக்குதொழிற்சாலை ஒன்றை விரைவில் நிறுவதிட்டமிடப்பட்டுள்ளது. (இ)

## விபத்து மரணம்

மாவிட்டபுரம், புதன்

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் மின்சார விபத்துக்கு உள்ளாகி மரணமான சுண்டிக்குளியைச் சேர்ந்த செல்லையா குலசிங்கம் (32 வயது) என்பவரின் மரணம் தொடர்பாக தெல்லிப்பளை திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு நா. தம்பிராஜா விசாரணை நடத்தினார். விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (உ)

## கோரிக்கை

சங்கானை, புதன்

தொல்புரம் கமத்தொழில் விளைவுப் பெருக்கக்குழு பிரதேச எல்லைக்குள் நடப்பு வருடகாலபோக நெற் செய்கைக்கான காப்புறுதிப் பணத்தை செப்டம்பர் மாதம் 30 ம் திகதிக்கு முன்பதாக சகல நெற் செய்கையாளரும் செலுத்த வேண்டும் என கமத்தொழில் காப்புறுதிச் சபை தொல்புரம் கமத்தொழில் விளைவுப் பெருக்கக் குழுத் தலைவர் திரு. ஆர். புஷ்பராஜா ஊடாகக் கேட்டுள்ளது.

அக்டோபர் 20 ம் திகதிக்கு முன் விதைக்கப்படும் நெற்காணிகள் தொடர்பில் விதைப்பிற்கு முன்னரே கட்டுப்பணம் செலுத்தப்படல் வேண்டுமெனவும் மேலும் விபரங்கள் அறிவதற்கு தங்கள் மாவட்டத்தின் விளைவுப் பெருக்கக் குழுக்களை அணுகும்படியும் திரு. புஷ்பராஜா கேட்டுள்ளார் (உ)

## புதிய நிர்வாகிகள்

மாவிட்டபுரம், புதன்

லயன்ஸ் கழகக் கிளை ஒன்று வட்டுக்கோட்டையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காரைநகர் சீநோர் நிறுவன அதிகாரியின் இல்லத்தில் நடந்த இந்த அங்குரார்ப்பண வைபவத்தில் யாழ். லயன்ஸ்கழகத் தலைவர் டாக்டர் எஸ் சுப்பிரமணியம், தெல்லிப்பழை லயன்ஸ்கழகத் தலைவர் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் முதலானோர் கலந்துகொண்டனர். (உ)

ஃ ஃ ஃ

புதன்

காங்கேசன்துறை சீமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்க வளவில் நடந்த சமயம் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவானார்கள்.

தலைவர்- திரு. ஆ. பாலசுப்பிரமணியம், உப தலைவர்-திரு. டி. பீற்றர், செயலாளர்கள்- இ. முருகையா, ச ஹிட்லர், பொருளாளர்- சி. பாலசுப்பிரமணியம்.

20 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது. (உ)

## வெற்றி

யாழ்ப்பாணம், வியாழன்

ஆவரங்கால் லிங்கன் விளையாட்டுக் கழகம் நடாத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் ‘ஏ’ பிரிவில் நாவாந்துறை சென். பேரீஸ் சனசமூக நிலையம் யாழ். சடேசஸ் விளையாட்டுக் கழகத்தை 3—1 கோல்களால் வென்றது. (கெ-உ)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6 45 10-00
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
பூம்புகார்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி பி. ப. 2-30, 7-00
வல்லவன் ஒருவன்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30 மாலை 6-00
விஜயகுமார் — ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ போன்; 7693
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
நீ ஒரு மகாராணி
நாளை முதல் பணம் பந்தியிலே

Regal (Jaffna)
Daily at 10-30 a.m., 4-45 & 7-00 p. m.
"SHARK"
(Action Film color)

சாந்தி
யாழ். நகர்
போன்; 7642
தினசரி 10-30, 2-30, 6-30 காட்சிகள்
முத்துராமன் ராஜம்மா
நாகேஷ் எம். ஆர். ராதா
கல்யாணகுமார் உதயகுமார் நடித்த
தாயின் கருணை

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
போன்; 7180
ஜெய்சங்கர் - ராஜஸ்ரீ-நாகேஷ் நடித்த
பூவா தலையா [புதியபிரதி]

மனோஹரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30 6-00
எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
அறிமுகம் பவானி
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, 2-00, மாலை 5-00,
சனி, ஞாயிறு 10-00, 1-00, 4-00, 6-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த் நடித்த
அன்னக்கிளி

RIO (Jaffna)
Daily 10-30, a.m. 4-45, 7-00 p. m.
LAST TOW DAYS
CUSTER OF THE WEST
From: 1'10-77
FURY AT THE SMUGGLER'S BAY

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-00, 6-00
தேவரின்
பெண் தெய்வம்


## ஆட்டுக்கடா திருடர் அதிகரிப்பு

மட்டுவில், புதன்

மட்டுவில் பகுதியில் திருடர்கள் தொல்லை அதிகரித்து வருகின்றன என தெரிய வந்துள்ளது.

இதனல் கிராமமக்கள் மத்தியிலேயே தொண்டர் படையை அமைத்து, இந்தத் திருடர்களின் கைவரிசைக்கு முற்றுப்புள்ளி வைக்க இப்பகுதி மக்கள் திட்டமிட்டுள்ளனர்.

கடந்த வெள்ளியன்று கல்வயலில்ஓர் ஆசிரியரின் வீட்டில், இரவு அவர்கள் சாப்பிடும் போது சுமார் 200 ரூபா பெறுமதியான ஆட்டுக்கடா ஒன்று திருடப்பட்டது. இதைத்தொடர்ந்து நான்கு கோழிகளும் திருடப்பட்டன.

இதை அடுத்து மறுநாள் அதேயாசிரியர் வீட்டிற்கு அருகாமையிலுள்ள ஒரு வீட்டில் ஓர் ஆட்டுக்கடா திருடப்பட்டது. வீடுகளில் திருட்டுப்போகிறதே என்று வீட்டில் பாதுகாப்பை பலப்படுத்த தோட்டத்திலுள்ள பூசணிக்காய், மரவள்ளிக்கிழங்கு ஆகியனவும் திருடப்படுகின்றன. (உ)

## ஐ. தே. க. ஆட்சிக்கு வந்தபின்

# 6 ஆயிரம் இ. போ. ச. ஊழியர் இடமாற்றம்?

### அலவி மௌலானு கண்டனம்

கொழும்பு, புதன்

6ஆயிரம் இ. போ. ச. ஊழியர்கள் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்

இத்தகவலை சிறிலங்கா சுதந்திர தொழிற்சங்க சம்மேளனத்தின் செயலாளர் ஜனுப் அலவி மௌலானு தெரிவித்தார்.

கடந்த ஜூலை மாதம் முதல் இன்றுவரையிலான காலப் பகுதியிலேயே இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் 15 நிரந்தர ஊழியர்களும் இக்காலப் பகுதியில் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினர். (இ)

## தனிநபர் விசாரணைக் கமிஷன்:

# சாட்சியங்களை சமர்ப்பிக்க குழு நியமனம்

யாழ்ப்பாணம், வியா.

இனக்கலவரம் தொடர்பாக விசாரணை நடாத்தவிருக்கும் தனிநபர் ஆணைக்குழுவுக்கு சாட்சியங்களை முறைப்படுத்திச் சமர்ப்பிக்கும்பொருட்டு ஒருகுழு நியமிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கையிலும் நடைபெற்ற இனக்கலவரத்தில் உயிர்ச்சேதமடைந்த, உடல் ஊறு ஏற்பட்ட, பொருளிழந்த, இடம்பெயர்ந்த அனைவரைப்பற்றியும்: இதற்கான காரணங்களைப்பற்றியும் விசாரணைநடத்த அரசு ஒருதனிநபர் ஆணைக்குழுவை நியமிக்கவிருக்கிறது அல்லவா?

இவ்வாணைக் குழு முன் சாட்சியங்களை முறைப்படுத்திச் சமர்ப்பிக்கவே இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

எனவே இவைபற்றி நேரில் கண்டவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக இல.148, நாவலர்வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (கா-உ)

# 'அகதிகளுக்கு ஆதரவளிக்க எம்தொண்டர் தயங்கவில்லை'

### கிளிநொச்சி எம். பி. சொல்கிறர்

யாழ்ப்பாணம், வியா

"கிளிநொச்சி அகதிகள்முகாமுக்கு வெளியிடங்களில் அல்லலுற்று வந்த அகதிகள் எவருமே புறக்கணிக்கப்படவில்லை. அவர்களை முகாம் தொண்டர்கள் பரிவுடனும், சகோதரத்துவ உணர்வுடனும் ஆதரித்து முகாம்களில் இடமளித்தனர்" என்று கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

"ஒரே ஒரு நாள் மட்டும் 400 அகதிகள் வரை ஒரேயடியாக வந்துவிட்டதால் சமாளிக்கமுடியாது சிரமம் ஏற்பட்டுவிட்டது. எனவே அவர்களை எமது முகாம் தொண்டர்களே முன்னின்று ப. நோ. கூ. சங்கத்தின் லொறி ஒன்றை வாடகைக்கு அமர்த்தி யாழ்ப்பாண முகாமில் ஒப்படைத்தனர்.

"இதுதவிர, அகதிகள்முகாம் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை எவரும் திருப்பியனுப்பப்பட வில்லை. கிளிநொச்சி முகாமுக்கோ எனது காரியாலயத்திற்கோ வந்த அகதிகள் எவரும் கடைவீதிக்கு அனுப்பப்படவில்லை. அத்தகைய துர்ப்பாக்கியநிலை இறையருளால் எமக்கு ஏற்படவுமில்லை" என்று திரு ஆனந்தசங்கரி மேலும் கூறினர்.

இன்றும்கூட 18 குடும்பங்கள் அகதிகளாக கிளிநொச்சிக்கு வந்துள்ளதாகவும் அவர்களுக்கு ஆதரவு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ)

# இ. போ. ச. ஊழியர்களுக்கு தலைவர் எச்சரிக்கை

கொழும்பு, புதன்

முறைப்படி லீவு எடுக்காமல் தொடர்ந்து வேலைக்கு வராமல்விடும் இ. போ. ச. ஊழியர்கள் வேலைநீக்கம் செய்யப்படுவர்.

இ. போ. ச. தலைவர் திரு. ஐ. ஜெயசூரியா இ. போ. ச. ஊழியர்களை மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

இ. போ. ச. ஊழியர்கள் தொடர்ந்து வேலைக்கு வராமல் விடுவதனல் பஸ்சேவைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வசதியீனம் ஏற்படுகிறது என்றும் ஊழியர்கள் இது விடயத்தில் கவனமாகஇருக்க வேண்டும் என்றும் திரு. ஜெயசூரியா கூறினர்.

பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற புகார்களை அடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பொதுமக்களுக்கு சிறந்த பஸ் சேவையை அளிக்கும்பொருட்டு எந்த நடவடிக்கையையும் எடுக்கத்தயங்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ)

## இவர்களின் வேதனம் அதிகரிக்கும்

மட்டுவில், புதன்

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் மாதாந்த வேதனம், இந்தமாதம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு அபிவிருத்தி ஆக்க ஆணையாளர் தனது சுற்றுநிருபம் ஒன்றின் மூலம் சகல சங்கங்களுக்கும் தெரிவித்துள்ளார்.

செப்டம்பர் மாதம் ஊழியர்கள்பெறும் மாதாந்த வேதனத்தில் இந்த அதிகரிப்பு நடைமுறையில்இருக்கும் இந்த கூட்டுறவுத்துறை ஆக்க ஆணையாளரின் சுற்று நிருபத்தின் படிக்கு ஒவ்வொரு சங்கத்திலும் உள்ள ஊழியர்களில் ஆகக்குறைந்த வேதனம் பெறும் ஒரு ஊழியர் 160 ரூபாவை தனது அடிப்படைச் சம்பளமாகப் பெறுவர் என்றும் தெரியவருகிறது.

## அப்பளத் தொழிலில் இறங்கினர்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் அந்தியகாலப் பணவுதவிச் சங்க கட்டிடத்தில் அப்பளத் தொழில் நிலையம் ஒன்று புதிதாகத்திறக்கப்பட்டுள்ளது. ஐந்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றும் இத் தொழில் நிறுவனத்தில் தினமும் ஐம்பது முதல் எண்பது இருத்தல் அப்பளம் உற்பத்தி செய்யப்படுகின்றது. அண்மையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த சுழிபுரம் வாலிபர் ஒருவர் தனது சொந்த முயற்சியைக் கொண்டு இப்புதிய தொழிலை ஆரம்பித்துள்ளார். சுழிபுரத்தில் புதிதாக அண்மைக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சிறு கைத்தொழில் முதல் நிறுவனம் இதுவேயாகும்.

## வியாழனன்று இறுதிச் சடங்குகள்

கொழும்பு, புதன்

காலஞ்சென்ற கடற்றெழில் அமைச்சர் திரு. எஸ். டி. எஸ். ஜெயசிங்காவின் இறுதிச் சடங்குகள் நாளை வியாழக்கிழமை அவரது சொந்த ஊரான கொஹுவலையில் நடைபெறும்.

இவரது பூதவுடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக கொஹுவலையில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

## 160 பேருடன்—

(1ம்பக்கத்தொடர்ச்சி)

வீசி தகர்க்கப்படுமென்று எச்சரிக்கை செய்துள்ளனர்!

ஜப்பானிய அமைச்சரவையின் விசேஷ கூட்டம் ஒன்று இன்று நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து கடத்தல்காரர்களுடன் ஜப்பானிய அரசு தொடர்புகொண்டுள்ளது. கடத்தல்காரர்களின் கோரிக்கை பற்றி இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை ஜப்பானிய அரசு முடிவெதையும் அறிவிக்கவில்லை.

(முன்வந்தசெய்தி 2ம்பக்கம்)

### மணிவாக்கு

ஒருமனிதனின் கௌரவம் அவனது நாக்கு நுனியில்தான் உள்ளது.

—பாரசீகப் பொன்மொழி

ஈழநாடு
The Eelanaadu

# அகதிகள் முகாமை அகற்றுக!

## கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்கள் கோரிக்கை

அரியாலை, புதன்

கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை தொடர்ந்தும் அகதிகள் முகாமாக இருப்பதை ஆட்சேபித்து, பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெறும் மாணவர் குழுவினர் யாழ்ப்பாண எம். பி. திரு. யோகேஸ்வரனையும், யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளரையும் நேரில் கண்டு தமது குறைகளைக் கூறியுள்ளனர்.

இவர்களுக்கு மாணவர் குழு தமது கடிதமொன்றையும் கையளித்துள்ளது.

''யாழ். மாவட்டத்தில் 6 கல்லூரிகள் அகதிகள் முகாமாகத் திறக்கப்பட்டன. மூன்றுந் தவணைக்காக ஏனைய கல்லூரிகள் திறக்கப்பட்டும், கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மூன்றுந் தவணைக்காக இன்னும் திறக்கப்படவில்லை. எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் ஆசிரிய கலாசாலைகளின் இறுதிப் பொதுப் பரீட்சையில் கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிபெற்றுக்கொண்டிருக்கும் இரண்டாம் வருட மாணவர்களும் பயிற்சிக்குத் தோற்ற வேண்டியிருக்கின்றனர். இதனுடன் இம்மாதம் 19ந் திகதி ஆரம்பிக்கப்படவிருந்த இந்து சமய ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சி இட வசதியினம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அகதிகள் முகாமில் மலேரியாக் காய்ச்சல், வயிற்றுளைவு போன்ற நோய்கள் பரவியுள்ளதால் உடனடியாக இம்முகாமை இக்கலாசாலை மண்டபத்திலிருந்து வேறொரு பாடசாலைக்கு மாற்றும்படி கோருகின்றோம்'' என்று கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

மாணவர் குழு எடுத்துக் கூறிய விஷயங்களைக் கேட்டறிந்த யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், விரைவில் இக்கலாசாலையைத் திறக்கத் தான் ஆவனசெய்வதாகத் தூதுக் குழுவிடம் உறுதியளித்தார்.

### இன்று

யாழ். பரி. யோவான் கல்லூரி தேசிய உயர்கல்வி வகுப்பு தொல்பொருள் ஆய்வுக் குழு மாணவர்களால் உருவாக்கப்பெற்ற நல்லூர் வெயிலுகந்த பிள்ளையார் ஆலய பெயர்ப் பலகையை யாழ். பல்கலைக்கழக வரலாற்று பேராசிரியர் கா. இந்திரபாலா இன்று பிற்பகல் ஆலய முன்றலில் திரைநீக்கம் செய்து வைப்பார்.

● ●

ஆய்வுக்குழு மாணவர்களால் உருவாக்கப்பெற்ற 'யமுனு ஏரி' பெயர்ப்பலகையை யாழ். நூதனசாலைக் காப்பாளர் எம். பி செல்வரத்தினம் யமுனு ஏரி முன்றலில் திரைநீக்கம் செய்து வைப்பார்.

### சிறப்புரை வழங்குவர்

அரியாலை, புதன்

யாழ்ப்பாணத்திற்கு குறுகிய விஜயத்தை மேற்கொண்டிருக்கும்குருநாகல் அத்தியட்சாதின ஆயர் வணக்கத்துக்குரிய பிதா லக்ஷ்மன் விக்கிரமசிங்கா ஆண்டகை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சுன்னாகம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தில் நடைபெறும் விசேட கூட்டத்தில் 'இலங்கையின் இன்றைய நெருக்கடி' பற்றி சிறப்புரை வழங்குவார். ஞாயிறு காலை ஆச்சிரமத் தேவாலயத்தில் திருவிருந்து ஆராதனையும் நடாத்துவார்.

## மன்னர்கள் காலம்

1815-ம் ஆண்டு முதல் 1947-ம் ஆண்டு வரையிலான காலத்தில் எமது நாடு பிரித்தானியரின் ஏகாதிபத்தியக் கொள்கைகளுக்கு அடிமைப் பட்டிருந்தது. அக்காலத்தில் எமது மக்கள் எமது நாட்டின் அரசியலிலும் பிற நாட்டுக் கொள்கைகளை நிர்ணயிப்பதிலும் குறைந்தளவு பங்கே வகித்தனர். எமது நாட்டில் விஜயன் முதல் ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன்வரை ஆட்சி புரிந்த சிங்கள மன்னர்கள் பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.''

இப்படியொரு கருத்தை பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்திருக்கிறார்.

சர்வதேச கல்விக்கான பண்டாரநாயகா நிலையத்தின் நிருவாகக் குழுவினால் பயிற்றப்படும் சர்வதேச விவகாரம் சம்பந்தமான கல்வியை மேற்கொண்ட மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட பட்டமளிப்பு விழாவில் பேசுகையிலேயே பிரதமர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

எந்தவல்லரசு முகாமிலும் சேர்ந்து தனது சுதந்திரத்தைப் பாதுகாப்பதும் ஜனநாயகக் கொள்கைகளைப் பேணுவதும் நாட்டின் நலனையும் சுபீட்சத்தையும் வளர்ப்பதுமே இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை என்பதையும் பிரதமர் விளக்கிக் கூறியிருக்கிறார்

ஆசியாவின் சுவிட்சர்லாந்தாக இலங்கை விளங்க வேண்டுமென்று கனவு கண்டவர் அமரர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா. எந்தவல்லரசு முகாமிலும் சேர்ந்து கொள்ளாத நடுநிலைமைக் கொள்கையே தமது கொள்கை என்று வகுத்தவர்.

ஆனாலும் அவரது கனவு நிறைவேறவில்லை.

அந்நியரின் ஆட்சியின்கீழ் இலங்கை வருவதற்கு முன்னர் இந்த நாட்டை பல மன்னர்கள் ஆட்சி புரிந்துவந்துள்ளனர்.

அந்தக் காலத்தில் பல படையெடுப்புக்கள் இருந்த போதிலும் ஆசியாவின் நெற்களஞ்சியமாக இலங்கை விளங்கியது.

தமிழ் மன்னர்களும் இந்த நாட்டை ஆட்சி செய்திருக்கின்றனர்.

சிங்கள மன்னர்களுக்கும் தமிழ் மன்னர்களுக்குமிடையில் படையெடுப்புக்களும் போர்களும் நடைபெற்றன. இதேசமயம் சிங்கள மன்னர்களுக்குத்தமிழ்மன்னர்களும் தமிழ் மன்னர்களுக்குச் சிங்களமன்னர்களும் உதவியும் ஒத்துழைப்பும் அளித்துவந்திருக்கின்றனர்.

எல்லாளனும் துட்டகைமுனுவும் யுத்தம் செய்தார்கள். யுத்தத்தில் தோல்வியடைந்த எல்லாளனுக்கு உரிய கௌரவத்தையும் மதிப்பையும் துட்டகைமுனு அளித்தான் என்று சரித்திரம் கூறுகிறது.

இதேபோல் தமிழ் மொழிக்கும் தமிழ்மக்களுக்கும் சிங்கள மன்னர்கள் உரிய மதிப்பளித்தார்கள் என்றும் சரித்திரம் கூறுகிறது.

சமீபகாலத்தில் இந்த வரலாறுகள் திரிக்கப்பட்டு பாடப் புத்தகங்களில் கூட இளம் சிறார்களின்மனதில் துவேஷம் ஊட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பிரதமர் தெரிவித்துள்ளது போல் சிங்கள மன்னர் கால ஆட்சிபற்றி உண்மையான ஆராய்ச்சி மேற்கொண்டு வரலாறு எழுதப்பட்டால் வேற்றுமையிலும் இந்நாட்டில் தமிழரும் சிங்களவரும் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள் என்ற உண்மை தெரியவரும் அது வழிகாட்டியாகவும் அமையலாம்.

## 'மக்கள் நலன்கருதியே அரசு புதியதிட்டம் வகுத்துள்ளது'

சங்கானை, புதன்

''கூட்டுறவுக்கடைகளில் பொருட்களைப் பெறுவதில் பொதுமக்கள் பலதரப்பட்ட கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். முக்கியமாக வாரத்திற்கான பங்கீட்டுப்பொருட்களை பெறச்செல்பவர்கள் பலமணி நேரம் கியூவரிசையில் கால் கடுக்கக்காத்து நின்றே அவற்றைப் பெறவேண்டிய நிலை நாடுபூராவும் நிலவிவருகின்றது. இந்தப் பரிதாப நிலையிலிருந்து மக்கள் விடுபடுவதற்காகத்தான் அரசாங்கம் 500 கூப்பன்களுக்கு அதிகமாக ஒரு கூட்டுறவுச்சங்கங்களை வைத்திருக்கக் கூடாது என்ற புதிய திட்டத்தை உருவாக்கி நாடுபூராவும் இதை நடைமுறைப்படுத்தவுள்ளது.''

இவ்வாறு சங்கானை ப. நோ. கூ. சங்கத்தலைவரான திரு.கே.சி. லோகேஸ்வரன் கூறினார்.

சங்கக் கிளைகளின் தலைவர்கள் செயலாளர்களுக்கான விசேட கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையிலேயே திரு. லோகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் கூட்டுறவின் வளர்ச்சி அவ்வச்சங்கங்களில் கடமைபுரியும் ஊழியர்களினும் நெறியாளர்களினதும் ஒத்துழைப்பினிலுமே தங்கியுள்ளது என்றார்.

நுகர்வோரின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுதல் கிளைகள் மூலம் சங்க அங்கத்தவர்களைக் கூட்டுதல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டு கூட்டுறவுப்பரிசோதகரும் நிர்வாக உறுப்பினருமான திரு. எஸ் கந்தையா, மற்றும் கிளைக்குழு உறுப்பினர்களும் உரையாற்றினர். (உ)

### உப்பளத்தில்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி

பது தொழிலாளர்கள் விதம் தனித்தனிக் குழுவாக ஒப்பந்த அடிப்படையில் வேலையாற்றுவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் கூறினார்.

''குறிஞ்சாத்தீவில் ஒரு லட்சம் பைகளில் உப்பு நிரப்புவதற்கான வேலைகள் இருக்கின்றன. இந்த வேலைகள் வெவ்வேறு வகைப்படும். உப்புக் குவியல்களைத் தளர்த்துவது, கூடைகளில் சேகரிப்பது, பைகளில் நிரப்புவது, உப்பு நிரப்பப்பட்ட பைகளை அப்புறப் படுத்துவது, சாக்குகளைக் கட்டுவது, லொறிகளில் ஏற்றுவது போன்ற வேலைகள் இருக்கும். ஒரு பைக்கு 37 சதம் விதம் வழங்கப்படும். முதல் நாள் வேலைக்குரிய சம்பளத்தைத் தொழிலாளர்கள் அடுத்த நாளே பெற்றுக்கொள்ளலாம்'' என்று தெரிவித்த உப்பள அதிகாரி;

''ஏற்றுமதி வேலைகள் துரிதப்படுத்தப்படவேண்டும் என்பதே எமது நோக்கம். இதனை நிறைவேற்ற எவ்வளவு தொழிலாளர்கள் வந்தாலும் ஒப்பந்த அடிப்படையில் ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இருக்கின்றோம். அகதிகள் யாரும் தொழிலாற்ற முன்வந்தால் நாம் முக்கியத்துவம் கொடுப்போம்'' என்றும் குறிப்பிட்டார்.

### தேசிய நலன்புரிச் சங்கம்

யாழ்ப்பாணம், வியா

தமிழர் நலன்புரிச் சங்கம் தனது பெயரை தேசிய நலன்புரிச்சங்கம் என்று மாற்றுவதென்று நிர்வாகசபைக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

''எமது சங்கம் அரசியல் கலப்பு, அரச சார்பு மற்றும் சாதி, மத, வேறுபாடுகளைத் துறந்து ஒவ்வொருவரும் தத்தமது சக்திகளை ஏனையோருடன் சேர்ந்து பகிர்ந்து கொள்வதன் மூலம் பொது எழுச்சியை உருவாக்கவேண்டும் என்ற பெரு நோக்குடன் பெயர்மாற்றம் செய்துள்ளது என்று சங்கத்தின் செயலாளர் திரு செ. செல்வகுமார் தெரிவித்துள்ளார்.

''சங்கத்தின் பெயரில் விஷேசமாக எதுவும் இருக்கவேண்டியதில்லை. எமது சேவையை சொல்லுக்கும் செயலுக்கும் அதிகதூர இடைவெளியில்லாமல், சேவைமனப்பான்மையை குறிக்கோளாகக் கொண்டு இயங்குவதே எமது நோக்கமாகும். பெயரில் மட்டுமே இயங்காமல் மனித சக்தியைக் குறுகிய காலத்தில் ஒருங்கிணைத்து வெற்றிகாண்பதே எமது இலட்சியமாகும்'' என்றும் செயலாளர் குறிப்பிட்டார். (செ)

### அடையாளம் காணப்பட்டார்

யாழ்ப்பாணம், வியா

ரயிலில் பிரயாணம் செய்து நாவற்குழி பாலத்தில் பிணமாகக் கிடந்தவர் கொட்டடியைச் சேர்ந்த காதர் மக்கீர் என்ற 24 வயது இளைஞர் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவரது சடலம் இரண்டு தினங்களாக பாலத்தில்கிடந்ததென்றும், இவரது தலையிலும் இடது கை, காலிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இறந்தவரின் குடும்பத்தினர் பொலிசாருக்குத் தெரிவித்த தகவலைத் தொடர்ந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த இறந்தவரின் சடலம் அடையாளம் காணப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இவரது மரணம்பற்றி பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். (கு)

''ஆசிரியருக்கு கடிதம்''

### மாவட்ட அமைச்சர்பதவி

தமிழர் விடுதலைக் கூட்டணி எந்த இலட்சியத்தை முன்வைத்து போராட முன்வந்திருக்கிறதோ அதற்கு மாவட்ட அமைச்சர் பதவியும் ஒரு தடைக்காரணமாக அமைகின்றது என்பதே பலரது அபிப்பிராயமாகும். மாவட்ட அமைச்சர் பதவியைச் கூட்டணி ஏற்காதவிடத்து அரசதரப்பில் மாவட்ட அமைச்சர்கள் நியமிக்கப் படுவார்கள் பெரும்பாலானோர் பொது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காது பதவியையும் அதிகாரத்தையும் துஷ்பிரயோகம் செய்யவே முற்படுவார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் வழங்கியமாவட்ட அரசியல் அதிகாரிகள் நியமனம், கூட்டுறவுச் சங்க நியமனம், இணக்க சபை நியமனம் மற்றும் ஏனைய நியமனங்களில் பொது மக்களின் பெரும்பான்மையிரது குரலுக்கு இடம்கொடுக்காது அக்கட்சியின்முத்திரை ஒட்டியவர்களுக்கே வழங்கப்பட்டது அன்று இந்நியமனங்களைபெற்றவர்கள் மஜபடியும் ஐக்கிய தேசியக் கட்சிக்கிளை இன்று ஆரம்பிக்க திட்டமிட்டிருக்கிறார்கள். பலர் ஆரம்பித்துவிட்டார்கள். தமிழர் கூட்டணி இப்பதவியை ஏற்காதவிடத்து இத்திடீர் கட்சிக்காரர்களின் அமைப்புகளுக்கே முக்கியத்துவம் வழங்கி அவர்களே எமது மாவட்டங்களின் சுகபோகங்களை தனித்திருந்து அனுபவிப்பர் இப்பதவியை ஏற்பதற்கு பலர் கங்கணம்கட்டுகிறார்கள். அவர்களின் சுயநலத் திட்டங்களை இப்போதிருந்தே கண்ணூராக் காண்கின்றோம்.

கூட்டணி மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்பதால் அரசாங்கத்தின் கொள்கைகளை எல்லாம் ஏற்பதாக கருதக்கூடாது. எந்த இலட்சியத்திற்காக போராட முன்வந்ததோ அதனை சற்றும் வழுவாமல் பார்த்து, இத்திட்டம்மூலம் பல அதிகாரங்களைப் பாவித்து குடியேற்றம், நிலம், மொழி, ஆகியவற்றில் தீவிரமாக ஈடுபட வாய்ப்புண்டு.

திட்டமிட்டு செயல்பட்டால் அமையும் தமிழ்ஈழத்திற்கு இதுவொரு வரப்பிரசாதமாக அமையலாம். தமிழ் ஈழத்து மாவட்ட அமைச்சர்களின் அதிகாரங்களையும் சேவைகளையும் அரசாங்கம் மதிக்காத வேளையில் அப்பதவியிலிருந்து ராஜினாமா செய்துவிடவேண்டும்.

கூட்டணியின் செயற்குழு இவ்விஷயத்தில் சிந்தித்துச் செயலாற்றுமென நம்புகிறேன்.

ஈஸ்வரன்
மட்டுநகர்

### இறைவரி—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய கூட்டத்தில் இறைவரித்திணைக்கள பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

யாழ்ப்பாணப் பிராந்தியப் பணிமனையில் திரு. சத்தியசீலன் தலைமையில் நேற்று நடைபெற்ற சங்கப் பொதுச் சபைக் கூட்டத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் சழகம் எடுத்த தீர்மானங்களை இதுவரை ஏற்று வேலைக்குத் திரும்புவதில்லை என்ற முடிவை நேற்று நடைபெற்ற கூட்டத்தின்போதும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தகது. (உ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலண்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.